## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை. இந்நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனி செலுத்த வேண்டிய வியாபாரத்தின் கீழ் சுனுயு இடமிருந்து பெறப்பட்ட முற்பணம், ஏனைய வியாபார செலுத்த வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டிய பிடிபணமாக முறையே ரூபா 45.6 மில்லியன், ரூபா 11.4 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதிகள் காட்டப்பட்டிருந்தன. இதன் விளைவாக, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ஒட்டுமொத்த செலுத்த வேண்டிய மீதி ரூபா 124 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மேலும் இம் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுனுயு உடனான கணக்கிணக்கம் தொடரப்படும். | கணக்குகளில் இருந்து கம்பனியின் உண்மையான நிலைமையை காண்பிக்கும் வகையில் தொடர்புடைய பதிவேட்டு மீதிகள் சீரமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சுனுயு இடமிருந்து பெறவேண்டிய சான்றுபடுத்தப்பட்ட வேலை விலைப்பட்டியல்கள், சுனுயு இடமிருந்து பெறவேண்டிய பிடிபணம், நிர்மாண சுனுயு சமர்ப்பிப்புக்கான வேலை விலைப்பட்டியல்கள் மற்றும் வியாபார கடன்பட்டோரின் கீழ் முறையே ரூபா 173.8 மில்லியன், ரூபா 345.9 மில்லியன், ரூபா 37.86 மில்லியன் மற்றும் ரூபா 43.2 மில்லியன் தொகையான கடன் மீதிகள் காட்டப்பட்டிருந்தன. இதன் விளைவாக, கம்பனியின் கடன்பட்டோர் மீதி ரூபா 1201.59 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மேற்படி மீதிகளை தீர்ப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 173.81 மில்லியன் தொகையான பெரும்பாலான கழித்தல் மீதிகள் கடன்பட்டோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன, அவை பகுதிக் கொடுப்பனவாகப் பெறப்பட்ட முற்பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அவை எதிரீடு செய்யப்படக்கூடாது.. ஆகையால் 2021 ஆம் நிதியாண்டில் பொறுப்புக்களாக அம் மீதிகளை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியின் பின்னர் ரூபா 130.62 மில்லியன் தொகை தீரப்பனவு செய்யப்பட்டிருந்தது. தனித்தனியாக கருதக்கூடாத .சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களிற்கு எதிராக 75மு சமர்ப்பித்தலின் தலைகீழ் பதிவுகளை (சநளநசளயட நவெசநைள) ரூபா 37.86 மில்லியன் தொகை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | கணக்குகளில் இருந்து கம்பனியின் உண்மையான நிலைமையை காண்பிக்கும் வகையில் தொடர்புடைய பதிவேட்டு மீதிகள் சீரமைக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 43.2 மில்லியன் வியாபார கடன்பட்டோர் மீதியில் ரூபா 22.95 மில்லியன் தொகை தொங்கல் செலவு மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. | தொடர்ந்து வரும் பேரேட்டு மீதிகள் அந்தந்த கடன்பட்டோர் மீதிகளுடன் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன , மேலும் தொங்கல் மீதிகள் உட்பட நீண்டகால நிலுவையாக உள்ள அசையாத மீதிகள் தேவையான நடவடிக்கைகளுக்காக சபையிடம் சமர்ப்பிக்கப்படும். | பொதுவாக உள்ள எந்தவொரு தொங்கல் கணக்கின் மீதியும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தின் முடிவில் பூச்சியமாக இருக்க வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய கணக்கு தொடர்ந்து இருக்கக்கூடாது. |
| (ஈ) | ரூபா 95.5 மில்லியன் தொகையான தொங்கல் கடன்பட்டோர் மீதி தீர்க்கப்படாமல் ஒரு குறிப்பிடத்தக்க காலப்பகுதியில் வியாபார பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பல்வேறு நீண்டகால நிலுவை மீதிகள் 2018 மே 1 இல் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. நோக்கம் பதிவழிப்பதற்காகும். ஆகையால் தகவல்கள் தேவையான | பொதுவாக உள்ள எந்தவொரு தொங்கல் கணக்கின் மீதியும் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டதும் முடிவில் பூச்சியமாக இருக்க |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகளுக்காக சபையிடம் சமர்ப்பிக்கப்படும். | வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய கணக்கு தொடர்ந்து இருக்கக்கூடாது. |
| (உ) | கம்பனியின் செயற்திட்டப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு அதே ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சான்றுபடுத்தப்பட்ட பணிகள் தொடர்பான ரூபா 202.9 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டுக்கான கம்பனியின் வருமானம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறையில், விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கும் திகதி இருந்த போதிலும், கம்பனிக்கு சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களை பெற்றவுடன் கம்பனி வருமானத்தை இனங்கண்டது. ஆகையால் இந்த மீதிகள் 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | கம்பனி எவ்வாறு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைக் காட்டிலும் தொடர்புடைய கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் செயற்திட்டப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் உப ஒப்பந்தங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட பணிகள் தொடர்பான ரூபா 2,421.7 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்காய்வு திகதி வரையிலும் சுனுயு ஆல் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. சரன்றுபடுத்தல் பணியில் தாமதம் ஏற்பட்டதன் விளைவாக அதே ஆண்டில் கம்பனி அதன் வருமானத்தை இனங்காணத் தவறியிருந்தது. | நடைமுறையில், விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கும் திகதி இருந்த போதிலும், கம்பனிக்கு சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களை பெற்றவுடன் கம்பனி வருமானத்தை இனங்கண்டது. ஆகையால் இந்த மீதிகள் 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | • கம்பனியானது வருமானத்தை எவ்வாறு நடைமுறையில் இனங்காணுகின்றது என்பதைக் காட்டிலும் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும்.<br>• கம்பனி சுனுயு உடன் இணைந்து இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் அங்கீகார செயன்முறையை துரிதப்படுத்த வேண்டும். |
| (எ) | கம்பனியின் செயற்திட்டப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 135.3 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மற்றும் அதே ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சான்றுபடுத்தப்பட்ட பணிகள் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | விலைப்பட்டியல்கள் சான்றுபடுத்தப்பட்ட திகதி மற்றும் விலைப்பட்டியல்கள் கம்பனிக்கு கிடைத்த திகதி என்பவற்றின் கால வேறுபாடு காரணமாக இது ஏற்பட்டதுடன் 12 சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் அனைத்தும் 2018 திசெம்பர் மாதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்டதுடன் கம்பனி 2019 சனவரி | கம்பனி எவ்வாறு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைக் காட்டிலும் தொடர்புடைய கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாதத்தில் வருமானத்தை இனங்கண்டிருந்ததுடன் அதே போல் 2017.∴. 2018 ஆம் ஆண்டிற்காக இது ஏற்பட்டிருந்தது. | |
| (ஏ) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சுனுயு இற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிற்குரிய ரூபா 590.8 மில்லியன் கூட்டுத்தொகையான இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நடைமுறைக் கண்ணோட்டத்தில், நாடு முழுவதும் உள்ள ீனு அலுவலகங்களில் இருந்து சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களை பெறுவதில் குறிப்பிடத்தக்க தாமதம் காணப்படுகின்றது. கம்பனிக்கு சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களை பெற்ற திகதியில் நிர்மாணப் பணிகளிலிருந்தான வருமானத்தை கம்பனி இனங்காணுகின்றது. | • கம்பனியானது வருமானத்தை எவ்வாறு நடைமுறையில் இனங்காணுகின்றது என்பதைக் காட்டிலும் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும்.<br>• கம்பனி சுனுயு உடன் இணைந்து இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் அங்கீகார செயன்முறையை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஐ) | நேரடி ஒப்பந்தங்கள் தொடர்பில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்காக சுனுயு இற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்கள் தொடர்பான வருமானம் ரூபா 158.7 மில்லியன் தொகையானதுடன் 75 சதவீதம் மாத்திரமே உரிய ஆண்டுகளில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது, பின்னர் மிகுதி வருமானம் நிறுத்திவைக்கப்பட்ட வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்படாமல் நடைமுறை ஆண்டு நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | நேரடி ஒப்பந்தப் விலைப்பட்டியல்கள் தொடர்பான ரூபா 158,663,672 தொகையான வருமானம் 2019 ஆம் ஆண்டின் சபோதான மர்ப்பித்தலின் தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது. சமர்ப்பித்த விலைப்பட்டியல் சான்றுறுதிப்படுத்தப்பட்டவுடன் அதே ஆண்டில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட வருமானம் இனங்காணப்படுகின்ற அதே நேரம் சமர்ப்பித்தலின் தலைகீழ் பதிவு முறைமைக்கு அனுப்பப்படுகிறது. | உரிய ஆண்டுகளுக்கான நேரடி ஒப்பந்தங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் தொகையில் 75 சதவீத வருமானத்தை இனங்காணும் போது அதன்பின் மிகுதி வருமானம் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்துடன் கட்டாயமாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வரிப் பொறுப்பு ரூபா 54.9 மில்லியனாக காணப்பட்ட போதிலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பதிவுகளின் பிரகாரம் அது ரூபா 49.2 மில்லியனாக இருந்தது. ஆகையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | எமது கம்பனியின் கணக்குப் புத்தகங்களில் வரி கொடுப்பனவுகளாக பதிவுசெய்யப்பட்ட தொகைகளுக்கும் அவற்றின் ஏடுகளின் பிரகாரம் ஐசுனு வழங்கிய தொகைகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஐசுனு | வருமான வரி, நீுகு, நுவுகு மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் போன்ற நியதிச்சட்ட தன்மையிலான கொடுப்பனவுகளை நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5.7 மில்லியன் வேறுபாடு அதவதானிக்கப்பட்டது. | இடமிருந்து வரி கொடுப்பனவுகளின் பிரித்தெடுப்புக்கள் தற்போது கிடைக்காததால், வரி செலுத்த வேண்டிய கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ள மிகுதி தொகைகள் மற்றும் கம்பனியின் புத்தகங்களில் செலுத்தப்பட்டதாக பதிவுசெய்யப்பட்ட தொகைகள் பற்றிய விளக்கத்தை நாங்கள் இத்துடன் உங்களுக்கு வழங்குகிறோம். | கண்காணிப்பதற்கான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஓ) | இலங்கை கணக்கீட்டு நியமம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (டுமுயுளு 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், மாற்றங்கள் டுமுயுளு 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், இன்னும் பயன்பாட்டில் உள்ள ரூபா 562.3 மில்லியன் தொகையான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகளின் பெறுமதியை முகாமைத்துவம் வெளிப்படுத்தியுள்ளது. | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் விடயத்தில், கம்பனி டுமுயுளு 16 இன் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்ய வேண்டும் அல்லது அதன் மதிப்பீட்டு மாற்றங்களைக் கருத்தில் கொண்டு டுமுயுளு 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | | |
| (ஹ) | சான்றுபடுத்தப்பட்ட வேலை விலைப்பட்டியல்கள் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியவை. | 1,772.52 | 751.29 | 1,021.23 | பல்வேறு காரணங்களால் கம்பனிகளுக்கு இடையேயான மீதிகள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதில்லை என்பதையும் நாங்கள் குறிப்பிட்டோம். ஆகையால் | கணக்கிணக்கம் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னேற்றம் சுனுயு உடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கணக்கிணக்கத்தை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ை) | சான்றுபடுத்தப்பட்ட வேலை விலைப்பட்டியல்கள் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியவை | 1622.6 | 1712.4 | 89.8 | சுனுயு உடனான கணக்கிணக்கம் தொடரப்படும். | கணக்கிணக்கம் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னேற்றம் சுனுயு உடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ைை) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதி | 1,888.32 | 467.72 | 1,420.6 | சுனுயு உடனான கணக்கிணக்கம் தொடரப்படும். | கணக்கிணக்கம் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னேற்றம் சுனுயு உடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ளை) | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ஏனைய வியாபாரம் | 444.46 | 120.7 | 323.76 | தொடர்புடைய பெறுமதிகளை சீர்செய்யும் செயன்முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | கணக்கிணக்கம் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னேற்றம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மேல் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ீசுனுயு) செலுத்த | 128.9 | 143 | 14.1 | வீதி அபிவிருத்தி அதிகார சபையுடனான கணக்குகளை ஒப்பிடும் பணி ஏற்கனவே | கணக்கிணக்கம் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முன்னேற்றம் மேல் மாகாணத்தின் |

| | | |
|---|---|---|
| வேண்டிய ஏனைய வியாபாரம் | ஆரம்பிக்கப்பட்டுள்ளது . | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் (ீசுனுயு) இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1053.9 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதி அறவிடப்படாமல் 04 வருடங்களுக்கு மேலாக இருந்தது. | நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் ஐந்தாண்டுகளுக்கு மேலாக நிலுவையாக உள்ள (ஏற்கனவே 502 மில்லியன் பெறப்பட்டு 2021 ஒக்தோபர் 13 இல் வைப்பு செய்யப்பட்டுள்ளது) ரூபா 589,863,423 தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் தீர்ப்பனவு செய்வதற்கு இணங்கப்பட்டதுடன் எமது கம்பனிக்கு அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உங்கள் கவனத்தைச் செலுத்த விரும்புகிறோம். | 04 வருடங்களுக்கு மேலாக இருக்கும் கடன்பட்டோர் மீதிகளை மேலும் தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் ஏனைய செலுத்த வேண்டிய மீதியின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 54.6 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய மீதி ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. | 2018 ஆம் ஆண்டின் கணக்காய்விற்கு இதே கணக்காய்வு ஐயவினா எழுப்பப்பட்டது, அதில் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஆவணங்கள் பேணப்பட்டு செயற்திட்டப் பிரிவால் கணக்காய்வு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, தேவையான நடவடிக்கைகளுக்காக சபைக்கு தகவல் சமர்ப்பிக்கப்படும். | 05 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள செலுத்த வேண்டிய மீதிகள், மீதி உறுதிப்படுத்தலை பெற்ற பின்னர் மேலதிக தாமதமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (ை) | 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074∴7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி. | வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 05 நிபந்தனைகளில் 04 கம்பனியால் திருப்திப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இல. 1.2.1 – இணக்க கூற்றில் கூறப்பட்டுள்ளவாறு சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான (ளுஆநுள இற்கான ளுடுகுசுளு) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074∴7 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து (05) நிபந்தனைகளில் நான்கு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ை) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு இணங்க பதவியணியினரை தயாரித்து அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சு மற்றும் தாய் நிறுவனத்தின் ஆலோசனையுடன் பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 46,086,098 மில்லியன் வரிக்கு பின்னரான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 36,877,319 மில்லியனாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 9,208,779 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதிக் கிரயம் ரூபா 6,676,207 ஆல் குறைவடைந்தமை மற்றும் வரிவிதிப்பு ரூபா 50,666,187 ஆல் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1.69 | 1.81 |
| விரைவு விகிதம் | 1.32 | 1.72 |
| மொத்தலாப விகிதம் - சதவீதம் | 8.06 | 6.84 |
| தேறியலாப விகிதம் - சதவீதம் | 1.38 | .87 |

கணிப்பிடப்பட்ட நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதம் என்பவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்பிற்குள் கம்பனி பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மொத்தலாப விகிதம் 17.84 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் தேறியலாப விகிதம் கிட்டத்தட்ட 58.62 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதிக் கிரயம் 39.57 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் வரிவிதிப்பு ரூபா 50.67 மில்லியனால் குறைவடைந்தமை என்பன வருடாந்த இலாபம் அதிகரிப்பதற்கான பிரதான காரணமாக அவதானிக்கப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள ரூபா 46.8 மில்லியன் கிரயத்திலான இயந்திரங்களை அப்புறப்படுத்தவோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஏற்பாட்டையோ மேற்கொண்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்காய்வாளர்கள் வழங்கிய வழிகாட்டல்களின் பிரகாரம் முகாமைத்துவம் 2021 மார்ச் 05 இல் கம்பனிக்கு சொந்தமான பொறிகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் நிர்மாண இயந்திரங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்முறை மதிப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக சபை பத்திரத்தை சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றது. | கணக்காய்வு சிக்கலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பனி மேலதிக தாமதமின்றி நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுனுயு இடமிருந்து பெறப்பட்ட ரூபா 662.5 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கும் மேலாக ஜீஊ இன் ஊடாக தீர்ப்பனவு செய்யப்படாமலேயே இருந்தது. | சுனுயு உடனான கணக்கிணக்கம் தொடரப்படும் என்பதுடன் உங்கள் குறிப்புக்காக கணக்கிணக்கத்தின் முன்னேற்ற அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. | சுனுயு இடமிருந்து பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மேலதிக தாமதமின்றி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சுனுயு இடமிருந்து பெற வேண்டிய ரூபா 883.9 மில்லியன் நிறுத்திவைத்தல் பணம் அறவிடப்படாமல் 04 வருடங்களிற்கு மேலாக காணப்பட்டது. | கொள்கையொன்றாக சுனுயு இடமிருந்து பெறவேண்டிய நீண்ட நிலுவை பிடித்துவைத்தல் பணத்திற்காக பொதுவான ஏற்பாட்டை நாங்கள் செய்துள்ளோம். | சுனுயு இடமிருந்து பெற வேண்டிய பிடித்துவைத்தல் பணம் மேலதிக தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சுனுயு இடமிருந்து பெறவேண்டிய ரூபா 119.2 மில்லியன் கூட்டுத்தொகையான நிறுத்திவைத்தல் பணம் 02 முதல் 04 வருடங்கள் வரை அறவிடப்படாமல் இருந்தது. | நிறுத்திவைத்தல் பணம் கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் கம்பனி பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் பணமாக பதிவு செய்யப்பட வேண்டிய நிறுத்திவைத்தல் பண கழிப்பனவை இனங்கண்டிருக்கவில்லை. | சுனுயு இடமிருந்து பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் மேலதிக தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதிக்கூற்றை சமர்ப்பித்தல் உரிய திகதியிலிருந்து ஒன்பது மாதங்கள் தாமதமடைந்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டவாறு கம்பனி அதன் நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கை திட்டமொன்று கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கம்பனியின் முகாமைத்துவத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு காலரீதியாக அதன் முன்கேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

**4.3 கணக்காய்வு குழு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சரியான தொகுப்புடன் ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடாந்த பாதீடு கருவிக் கட்டுப்பாடொன்றாக தயாரிக்கப்பட்டு கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். |